

தொகுதி 1
சித்திரம் 10
பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்
விரக்தியுன் பலன்
www.ponnivala.com
© 2012 Ponnivala Publishing

பகுதி-1 சித்திரம்-10

# தற்கொலை முயற்சி

வாளவந்தியில் தாமரை தன் அண்ணன்களினால் அடித்து, அவமானப்படுத்தப்படுகிறாள். இதனால், கோபங் கொண்டு அவர்கள் மேல் சாபமிட்டு, பின் காளிகோவிலுக்கு செல்கிறாள். அங்கே வந்த அண்ணன்கள் சாபத்தை நீக்குமாறு மன்னிப்பு கேட்கிறார்கள். பின்பு, பொன்னிவளநாட்டுக்கு திரும்பிய அவளிடம்,தன் பேச்சை கேட்காமல் அண்ணன்களிடம் சென்று வந்ததிற்காக குன்னுடையான் கடும்கோபம் கொண்டான். இதனால் மனமுடைந்துபோன அவளுக்கு உதவ விஷ்ணு வந்தார்.







மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஓப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


தாமரை காளி கோயிலில் தனக்கு ஏற்பட்ட நிலையைச்சொல்லி அழுது, புலம்பினாள்.
ஓ உலகமாதா! என் நிலையையும்,எனக்கு நடந்த அநீதியையும் கேள்.
பல வருடங்களின் பின் என் அண்ணன்களையும், அவர்களின் குழந்தைகளையும்,பார்க்க வந்த என்னை காவலாளியை விட்டு அடித்து, அவமானப்படுத்திவிட்டனர்.



மறுநாள் காலையில், வாளவந்தியிலுள்ள காளிகோயிலின் பூசாரி தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோவிலுக்கு வந்தார்.











பூசாரி கோயிலின் கதவுகள் திறந்திருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டார். ஆனால், தாமரை அங்கே இருப்பதை அவர் கவனிக்கவில்லை.

## தற்கொலை முயற்சி



நேற்று, நான் தானே கதவுகளை நன்றாக பூட்டிவிட்டுச் சென்றேன்.எப்படி திறந்திருக்கும்?
அப்போது, தாமரையை கண்ட பூசாரி..
யாரம்மா நீ..?
கேளுங்கள் அந்தணரே! நான்,இதே வாளவந்தியில் பிறந்தவள். என் பெயர் தாமரை
இந்த ஊரின் பெரிய நிழக்கிழார்களான என் அண்ணன்களை பார்க்க வந்தேன்.
தாயே! ஏன் உங்கள் உடை கிழிந்து,அழுக்காக இருக்கிறது?
அவர்கள், என்னை வரவேற்பதற்கு பதிலாக..
காவலாளியை விட்டு அடித்து விரட்டிவிட்டனர்.



அதனால் ஏற்பட்ட காயங்களை பாருங்கள்
பாவிகள்!
இப்படியா! சொந்த தங்கையை, ஒரு பெண் என்று கூட பாராமல் அடிப்பது
இரக்கமற்றவர்கள்
அம்மா! நீங்கள் இங்கேயே காத்திருங்கள். நான் சென்று பூஜைக்கு தேவையானவற்றை எடுத்து வருகிறேன்.!
உண்மையில், பூசாரி பூஜைப்பொருட்களை எடுக்கச்செல்லவில்லை. மாறாக,தாமரையின் சகோதரர்களைப்பார்க்க அரண்மனைக்குச்சென்றார்.
என்ன இது! அரண்மனையின் அனைத்து கதவுகளும் பூட்டியிருக்கிறதே!


## தற்கொலை முயற்சி


பூசாரி அரண்மனையின் முன்வாசலில் நின்று,பலமாக கதவைத் தட்டினார்.
கதவு உற்புறமாக தாளிடப்பட்டுள்ளதே!
யாரோ உள்ளே இருக்கிறார்கள்.
கதவை திறங்கள் நான் பூசாரி வந்துள்ளேன்.
இந்த குரல் நம் காளிகோவில் பூசாரியுடையது போல் இருக்கிறதே!
பணிப்பெண்ணை அழைத்து கதவை திறக்க சொல்லுவோம்.
அவர்கள் கூறியபடி பணிப்பெண் கதவை திறந்தாள்.
சாமி,அவர்கள் உள்ளேதான் இருக்கிறார்கள்.
பெண்ணே! நிழக்கிழார்கள் இருவரும் எங்கே?
சரி,நீ போய் நான் வந்திருப்பதாக அவர்களிடம் சொல்லு.



எதற்காக கதவை அடைத்து விட்டு உள்ளே இருக்கிறீர்கள்?
அந்தணரே! பொன்னிவளநாட்டிலிருந்து என் தங்கை தாமரை வந்திருந்தாள்.
அவளுக்கு நீண்டகாலமாக குழந்தையில்லை.
அதனால், அவள் இங்கு வந்து எங்கள் குழந்தைகளை பார்த்தால் அவர்களுக்கு ஏதும் நடந்துவிடும் என்று நினைத்தோம்.
ஒரு வேளை எங்கள் குழந்தைகளில் ஒன்றைக்கேட்டால்...!


இதையெல்லாம் யோசித்து தான் கதவுகளை எல்லாம் அடைத்துவிட்டு உள்ளே இருந்து கொண்டோம்.
ஏன் இப்படிச்செய்தீர்கள்?
ஊரில் எத்தனை பேர் குழந்தையில்லாமல் இருக்கிறார்கள்.
அவர்கள் எல்லாம் எதிரில் வந்தால் உங்கள் குழந்தைகளுக்கு ஏதும் நடந்துவிடுமா?.
இதையெல்லாம் எங்கள் மனைவிகள் சொன்னதால் தான் செய்தோம்.
அது சரி! உங்கள் குழந்தைகளை எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள்.
வீட்டில் பெரிய கூடைக்குள் மறைத்து வைத்திருக்கிறோம்.


பூசாரி குழந்தைகள் இருந்த இடத்திற்கு, அவர்களுடன் சென்றார்.
கூடையை திறவுங்கள் பார்ப்போம்.
கூடைக்குள், குழந்தைகள் அனைவரும் இறந்துகிடந்தனர்
அய்யே!உங்களின் முட்டாள்தனத்தினால் வீணாக சாபத்திற்கு ஆளானீர்களே.
ஆ! என்ன கொடுமை அனைத்து குழந்தைகளும் இறந்துவிட்டதே...




தாமரையின் சாபம் பலித்துவிட்டது.
இனி, அவளால் மட்டுமே குழந்தைகளை காப்பாற்ற முடியும். நீங்கள், உடனே காளிகோவிலுக்கு சென்று தாமரையிடம் மன்னிப்பு கேளுங்கள்.
தாமரையிடம் நான் இங்கே வந்ததைப்பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்.
பின்பு, பூசாரி வெள்ளை துணியை கொண்டு குழந்தைகளின் உடல்களை மூடிவிட்டு, காளிகோவிலுக்கு விரைந்து சென்றான்.


அங்கே கோயிலில்...
தாயே! உன்னை பார்க்க அண்ணன்கள் வந்திருக்கிறார்கள்.
அந்த சண்டாளர்கள்! எதற்காக, இங்கே வந்திருக்கிறார்கள்?
நான் இங்கே இருப்பது அவர்களுக்கு எப்படி தெரியும்?
நீங்கள் போய்ச்சொன்னீர்களா?
அங்கே வந்த அண்ணன்கள் அவள் காலடியில் விழுந்து அழுதனர்.
தாமரை! தாமரை!
தயவுசெய்து எங்களை மன்னித்து, எங்கள் குழந்தைகளுக்கு உயிர் கொடு.
நாங்கள் மனைவிகளின் பேச்சைக்கேட்டு தவறு செய்துவிட்டோம்.



அப்போது காளிமாதா..
அம்மா! தாமரை உன் அண்ணன்கள் செய்த தவறை மன்னித்து...
குழந்தைகளை மீண்டும் உயிர் பெறச்செய்யவேண்டும்.
காளிமாதா! உன் சொல்படியே நடக்கிறேன்
ஆனால்! என் அண்ணன்களின் முகத்தில் விழிக்கவேமாட்டேன். அவர்களை இங்கிருந்து போகச்சொல்லுங்கள்.
நிழக்கிழார்கள் அரண்மனைக்கு திரும்பி வந்தனர். பூசாரி அவர்களை மறைந்து இருக்கும் படி சொன்னார்.
நீங்கள் இருவரும் மனைவியருடன் உள்ளேயே இருங்கள் வெளியே வரவேண்டாம்.
தாமரை சொன்னதை கேட்டீர்கள் தானே?
ஆமாம்!...ஆமாம்! எங்கள் குழந்தைகள் பிழைப்பதற்காக எதையும் செய்கிறோம்.
நல்லதே நடக்கும்! நான் இருக்கிறேன்.


சிறிது நேரத்தில் அங்கே வந்த தாமரை, துணியினால் டி இருந்தவைகளை பார்த்து...
அந்தணரே! என்ன இது?
இந்த துணியின் அடியில் என்ன இருக்கிறது?
தாமரை! உன் சாபத்தினால் உயிரை இழந்த அண்ணன்களின் குழந்தைகள்.
அந்தணரே! வீண்பழி செல்ல வேண்டாம்.நானா குழந்தைகளைக்கொன்றேன்?


# தற்கொலை முயற்சி




தாயே! நீங்கள் கொடுத்த சாபத்தினால் ஏற்பட்டது..
தாங்கள்தான் மன்னித்து,குழந்தைகளை உயிர்பெறச்செய்ய வேண்டும்.
ஐயா! என்ன செல்கிறீர்கள்?
என்னால் முடிந்ததை செல்லுங்கள்.
முடியும் தாயே! தாங்கள் மனம் வைத்தால் முடியும்.சிவனின் அருளினால் பிறந்தவர் நீங்கள்.
பூசாரி கூறியதை கோட்ட தாமரை நன்கு யோசித்தாள்.
சரி! நான் முயற்சிக்கிறேன்
அப்படி நான் உயிர்பித்தால் எனக்கு இரண்டு பெண் குழந்தைகளை கொடுக்கவேண்டும்.
பூசாரி,தாமரை கூறிய நிபந்தணையை ஏற்றுக்கொண்டார்.
அம்மா! உங்கள் விருப்பப்படியே செய்கிறோம்.
முதலில்,அவர்களை உயிர்பெறச்செய்யுங்கள்.


தாமரை உதவிக்காக என்னை அழைக்கிறாள்!
தாமரை,குழந்தைகளை உயிர்பிக்க விஷ்ணுவின் உதவியை வேண்டி அவரை அழைத்தால்.
விஷ்ணு விரைந்து சிவனிடம் சென்றார்.
எங்கே அவரைக்காணவில்லை!
அவர் இன்னும் கானகத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறார் போல.
சிவனை அங்கே கானாத விஷ்ணு மாயக்கோலை தாமே பூமிக்கு அனுப்பினார்.
இந்த மாயக்கோல் இல்லாமல் தாமரையால் குழந்தைகளை உயிர்பிக்க முடியாதே?


விஷ்ணு அனுப்பிய மாயக்கோல் தாமரையின் கைகளை வந்தடைந்தது.
அவள்,மாயக்கோலின் மூலம் ஒரு ஒளிப்பிழம்பை உருவாக்கி,உயிரற்ற குழந்தைகளிடம் அனுப்பினாள்.அதன் பின்பு நடந்தது அதிசயம்..
குழந்தைகள் அனைவரும் தூங்கி எழுவது போல் எழுந்தனர்.


முன்பு கூறியபடி,தாமரை இரு பெண் குழந்தைகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.
அம்மா! இரண்டு பெண் குழந்தைகளையும்,எங்கே அழைத்துப் போகிறீர்கள்?
என்ன கேள்வி இது! கொடுத்த வாக்கை மறந்துவிட்டீர்களா?
என்னை யாரும் தடுக்கமுடியாது.
கோபம் வேண்டாம் தாயே! நான் தடுக்கவில்லை.
உங்கள் மகன்களுக்கு திருமண வயது வந்தவுடன்,இவர்களை கூட்டிச் செல்லலாம் என்றேன்.
ஆகட்டும்! உங்கள் விருப்பப்படி,இப்பொழுதே கூட்டிச் செல்லுங்கள்.
நான் மற்ற குழந்தைகளை உங்கள் அண்ணன்களிடம் ஒப்படைத்துவிடுகிறேன்.


தாமரை இரு பெண் குழந்தைகளையும் விநாயகர் கோவிலுக்கு அழைத்துவந்தாள்.
அப்பனே விநாயகா!
எனை காக்கும் காஞ்சிநாதா!
இந்தப்பெண் குழந்தைகள் இருவரும் கற்சிலையாக மாறவேண்டும்.
எனக்கு மகன்கள் பிறந்து,அவர்கள் திருமணவயதை அடைந்ததும்..
வாளவந்திக்கு கூட்டி வந்து,இந்தப்பெண்களை திருமணம் செய்துவைப்பேன்.
விஷ்ணு,தாமரை வேண்டிக்கொண்டதின் படி,அந்த இரு பெண் குழந்தைகளையும் கற்சிலையாக மாற்றினார்.



இரு சிலைகளும் விநாயகர்கோயிலின் முன்பாக நின்றன.
விஷ்ஷ்ஷ்
தோனீக்களே,கருவண்டுகளே! இங்கே வாருங்கள்.
நீங்கள் இந்த சிலைளுக்கு காவலாக இருங்கள்.
விஷ்ஷ்ஷ்
பின்பு தாமரையும்,அவளுடைய காவலர்களும் வாளவந்தியில் இருந்து புறப்பட்டு....
பொன்னிவளநாட்டை அடைந்தனர்.


தாமரை,தன் அரண்மனையின் முன்பாக வந்ததும்..
காவலாளிளே! பணிப்பெண்னே!
வாளவந்தியில் நடந்ததை,இங்கே யாரிடமும் சொல்லவேண்டாம்.
அப்படியே! செய்கிறோம் தாயே.
சேவகா! அரசர் எங்கே?
அவர் உணவருந்தி விட்டு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார்.



பெண்ணே! தாமரை வந்து விட்டாளா? அவளின் குரல் கேட்டதே?
ஆமாம் சாமி
நடந்து வந்ததில் களைப்பாய் இருக்கிறதென்று படுத்திருக்கிறார்கள்.
குன்னுடையான் தாமரையை பார்க்கச்சென்றார்.
தாமரை! தாமரை!
எதற்கு இப்படி மூடிப் படுத்திருக்கிறாய்?
நடந்து வந்ததில் களைப்பாய் இருக்கிறது.
சிறிதுநேரம் உறங்கிவிட்டு வந்து தங்களை பார்க்கலாமென்று இருந்தேன்.
பெண்ணே! எனக்கு சந்தேகமாக இருக்கிறது.
உண்மையை சொல்! அண்ணன்களின் வீட்டில் உனக்கு என்ன நடந்தது?


ஒன்றும் இல்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.
அப்படியானால், எதற்காக வந்ததும், என்னைக்கூட பார்க்காமல் படுத்துக் கொண்டாய்.
குன்னுடையான்,தாமரையின் மூடியிருந்த சீலையை விலக்கி பார்த்தார்.
இது! நான் வெகுதூரம் வெயிலில் நடந்து வந்ததால்...
ஏற்பட்ட கொப்பளங்கள்.
முட்டாள்! பெண்ணே..
பொய் செல்லாதே! நான் எத்தனை முறை சொல்லியும் கேட்காமல் உன் அண்ணன்களின் வீட்டிற்குச் சென்றாயே!
பார்த்தாயா! இப்பொழுது என்ன நடந்திருக்கிறது என்று !



என் பேச்சை மதிக்காதலால் தான் உனக்கு இந்த நிலை.
எனக்கும் கெட்ட பெயரை உண்டாக்கி விட்டாயே.
இனிமேல்,நீ என் முகத்திலேயே விழிக்கக்கூடாது.
இப்போதே அரண்மனையை விட்டுச் சென்றுவிடு.
தயவு செய்து அப்படிச் செல்லாதீர்கள்.
நீண்ட காலத்திற்கு பின் அண்ணன்களையும் குழந்தைகளையும்
காணும் ஆசையில் சென்றேன்.அது தவறா..
குன்னுடையான் கோபத்துடன் அங்கிருந்து சென்றான்.இதனால்,தாமரை மிகவும் மனமுடைந்து போனாள்.


# தற்கொலை முயற்சி



தாமரை நடந்தது அனைத்தையும் நினைத்து கண்ணீர் வடித்தாள்.
ஓ....ஓ,,,ஓ,...
என் கணவர் நான் வாளவந்திக்கு சென்றால், அவமானப்படுவேன் என்று சொன்னார்.
அவர் சொன்னது போல், அண்ணன்கள் என்னை அடித்து கேவலமாக நடத்தினர்.
இதனால்,கோபங்கொண்ட கணவர் தன் பேச்சை மதிக்காத, என்னை அரண்மனையை விட்டே போகச்சொல்லிவிட்டார்.
எனக்கே குழந்தையும் இல்லை! இனியும் இந்த உலகத்தில் இருப்பதால் என்ன பயன்!
சேவகா! சென்று ஆசாரிகளையும் கொத்தர்களையும் இங்கே அழைத்து வா.
தாமரை பணிப்பெண்ணையும் சேவகனையும் அழைத்து சில காரியங்களை செய்ய பணித்தாள்.
பெண்ணே!
ஒரு வள்ளம் முத்தும் அதனுடன் வெற்றிலையும் பாக்கும் வைத்து எடுத்து வா.


ஆசாரிகளும்,கொத்தர்களும் வந்தனர்.
கொத்தர்களே! ஆசாரிகளே!
நீங்கள் அறுபதடி உயரத்தில் ஒரு பெரியதூணை எழுப்புங்கள்.
அதன் உச்சியை சென்றடைய படிகள் அமைக்க வேண்டும்.
பின், அத்தூணைச்சுற்றி ஈட்டிகளை நட்டு வையுங்கள்.
அம்மா! இதை எங்கே?,எவ்வளவு நாட்களில் செய்ய வேண்டும்?
இந்தத்தூணை செல்லாத்தாகோவிலுக்கு முன்பாக செய்யுங்கள்.
அனைத்தையும் பதினைந்து நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.
நீங்கள் சொன்னபடியே செய்கிறோம். தாயே!
சரி! வேலையை திங்கட்கிழமை ஆரம்பியுங்கள்.



விரைவில் வேலை ஆரம்பிக்கப்பட்டது.
ஒரு பெரிய கல் தூக்கி வரப்பட்டு,நேராக நிறுத்தப்பட்டது.
ம்ம்ம்ம்.....
இறுதியாக பதினைந்து நாட்களுக்குள் வேலை முடிந்தது.


மறுநாள் தாமரை அதிகாலையில் எழுந்து செல்லாத்தா கோவிலுக்குச்சென்றாள்.
கொக்கரக்கோகோாா
விடிவதற்கு முன்பாக கோவிலுக்கு சென்று,அங்கே நின்ற பெரிய தூணை பார்த்தாள்.


வைகுந்தவாசனே!
பரந்தாமா!
இந்த தூணின் மேல் இருந்து கீழே குதித்ததும்,என் உடல் பல பாகங்களாக சிதறி போக வேண்டும்.
தாமரை,தூணின் உச்சியை அடைந்ததும் முடியை அவிழ்த்து விட்டாள்.
மகாவிஷ்ணுவே! பெருமாளே!
காஞ்சி நாதா!
நான் கீழே குதித்ததும் என் உயிர் பிரியட்டும்.


தாமரை குதிப்பதற்கு தயாரானாள்.
காஞ்சி நாதா! நீயே துணை!
நான் உடனடியாக சென்று தாமரையை காப்பாற்ற வேண்டும்.
விஷ்ணு விரைந்து வந்து...
தாமரை! தாமரை! குதிக்காதே!
நான் சொல்வதை சற்று கேள்!
பெண்ணே! உன் கஷ்டங்களை போக்க நான் உதவி புரிகின்றேன்.
நீ எடுத்திருக்கும் முடிவு தவறானது. முதலில்,கீழே இறங்கி வா.
விஷ்ணுவின் வார்த்தையால் மனமாறிய தாமரை கீழே இறங்கி வந்தாள்.


அவரிடம் நடந்தது அனைத்தும் கூறினாள்.
பரமாத்மாவே! என் கஷ்டங்கள் தீர, குழந்தை பாக்கியத்தை அருளுங்கள்.
இல்லையேல்,நான் இறப்பதை தவிர வேறு வழியில்லை.
நீ வீணாக கவலைப்படாதே! நான் இருக்கிறேன்.
தாமரை! முதலில், சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு செய். உன் கணவரையும் கூட்டிவா?
நாதா! தயவுசெய்து பூஜைக்கு வரவேண்டும்.
தாமரை,குன்னுடையானிடம் நடந்தது அனைத்தையும் கூறி பூஜைக்கு அழைத்தாள்.


பூஜைக்கான அனைத்தும் தயாரானதும் விஷ்ணு அங்கே வந்தார்.
தாமரை! தேங்காயை உடைத்து பூஜையை ஆரம்பி.
விஷ்ணு ஜாதகத்தை எடுத்து தாமரையின் குழந்தை பாக்கியதையை ஆராய்ந்தார்.
இப்பிறவியிலும், அடுத்து வரும் இரு பிறப்புக்கலிலும் தாமரைக்கு குழந்தையில்லை.
அத்தோடு தொடர்ந்து வரும் நான்கு, ஐந்து, ஆறு, ஏழு பிறப்புக்களுக்கும்...
தாமரைக்கு குழந்தை பாக்கியம் இல்லை.
ஆ..! என்ன சொல்கிறீர்கள்!


வைகுந்தனே! எனக்கு தொடர்கின்ற ஏழு பிறப்பிலும் குழந்தையே பிறக்காது என்கிறீர்களா?
ஐயோ..! என் விதியை மாற்றமுடியாதா?
முடியும் தாமரை! ஆனால்,அது மிகச்சுலபம் அன்று.நீ பல கஷ்டங்களை சந்திக்க வேண்டும்.
அதற்கு நீ தயாரா?
பரந்தாமா! நான் எந்தக் கஷ்டத்தையும் தாங்க தயார்.
எனக்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதற்காக..
அப்படியா! நல்லது தாமரை,நான் சொல்வது போல் செய்யுங்கள்.



விஷ்ணு,குன்னுடையானுக்கும்,
தாமரைக்கும் அவர்கள் செய்ய
வேண்டிய காரியங்களை
விளக்கமாக எடுத்து கூறினார்.
அக்காரியங்கள் மிகவும்
கஷ்டமான போதிலும்,குழந்தை
பாக்கியம் என்ற ஒன்றிற்காக
செய்யத்துணிந்தனர்.
இனி,கடவுள் தான் அவர்களை
காக்க வேண்டும்.



மகாவிஷ்ணு,
அவர்களிடம் அப்படி
என்ன கஷ்டமான
காரியத்தை
செய்யச்சென்னார்?
அதனால்,அவர்களு
க்கு குழந்தை
பாக்கியம்
ஏற்படுமா?
இது
எவ்விதத்திலாவது
பென்னிவளநாட்டை
பாதிக்குமா?...



# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic10tamil





வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!




01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com
மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:
www.ponnivala.com

ISBN 978-1-927093-51-1
90000 >
9 781927 093511

© 2012 Ponnivala Publishing